என்று சொல்ல முடியாது. ஒரு குறிப்பிட்ட சில பேர் தான் இப்படி போய்க்கொண்டு இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லாம் நாம் தருகிற விலையைப் பெற்றுக்கொண்டு விடுகிறார்கள். இப்படி வழக்குப் போடுவதால் சில பணிகள் தாமதம் ஆகின்றன என்பது உண்மைதான். அதற்காகத்தான் வீட்டுவசதி வாரியத்தைப் பொறுத்தவரையில் குறிப்பாக ஒரே இடத்தில் மட்டும் நிலத்தை எடுக்காமல், இரண்டு இடங்களில் நிலத்தை எடுத்து, மற்றொரு பகுதியில் வீடு கட்டும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன. ஆகவே வேலைகள் தடைபடவில்லை. ஒரு பகுதியில் வீடு கட்டும் பணிகள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இராமப்புற வீடுகட்டும் திட்டத்தின் கீழ் வீடுகட்ட ஒதுக்கப்பட்ட தொகை.

244—*வினா எண். 17397—திரு. க. பரமமலை : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 1980-81, 1981-82, 1982-83 ஆம் ஆண்டுகளில் வீடு கட்ட ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) ஒதுக்கப்பட்ட தொகை முழுவதும் வீடுகள் கட்டுவதற்கு செலவழிக்கப்பட்டு விட்டதா?

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : (அ) மற்றும் (ஆ): கிராமப்புற வீட்டுவசதி திட்டத்தின் கீழ் 1980-81, 1981-82 1982-83 ஆம் ஆண்டுகளில் வீடுகள் கட்டுவதற்காக முறையே ரூ. 929.53 இலட்சம் ரூ. 1,476.90 இலட்சம் ரூ. 1,073.52 இலட்சம் ஆக மொத்தம் ரூ. 3,479.95 இலட்சம் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி சங்கத்திற்கு அரசு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகம் (Hudco) மற்றும் நாட்டுடைமையாக்கப்பட்ட வங்கிகள் (Nationalised Banks) ஒதுக்கீடு செய்தன. ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை முழுவதும் வீடுகள் கட்ட செலவு செய்யப்பட்டு விட்டது.

திரு. ஜே. எஸ். இராசு : தலைவரவர்களே, கிராமப்புற வீடு கட்டும் திட்டத்தில் கீழே இருக்கின்ற சங்கங்களிலிருந்து அபெக்ஸ் சொசைட்டிக்கு வந்திருக்கிற விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை எவ்வளவு? இவ்வாண்டு இன்றைய தேதி வரையில் பணம் பட்டுவாடா செய்யப்படாமல் இருக்கிற மனுக்களின் எண்ணிக்கை எவ்வளவு என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, தமிழ்நாடு முழுவதும் 104 வட்ட, கோட்ட அளவிலான கிராமப்புற கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இந்தச் சங்கங்களுக்கு

1984 மார்ச் 9]

வருகிற மனுக்களை ஆரம்பத்தில் அந்தந்த கூட்டுறவுச் சங்கங்களில் பரிசீலனை செய்து வைக்கிறார்கள். அதன் பின்னால் மாநிலச் சங்கம் பணம் கொடுக்கிற அளவுக்கு ஒவ்வொரு ஆண்டும் விண்ணப்பங்களை அனுப்பி வைக்கிறார்கள். ஆறாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 40,000 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்ற அடிப்படையில் முடிவு செய்து, அந்த அளவுக்கு விண்ணப்பங்களைப் பெற்றுகொண்டு, வீடுகள் கட்டப் படுகின்றன. இன்னும் மாநிலச் சங்கத்தில் ஏறத்தாழ 6000-க்கும் அதிகமான மனுக்கள் நிலுவையில் இருக்கின்றன. அவற்றைப் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. சோ. அழகர்சாமி : தலைரவரவர்களே, இந்த கிராமப் புற வீடு கட்டும் திட்டம் ஒரு சிறப்பான திட்டம்; தேவையான திட்டம். ஏனென்றால் இந்த கடன் வசதி இல்லை என்றால் கிராமப் புறத்தில் யாரும் வீடு கட்ட முடியாது. காரணம் அவர்கள் மிகவும் குறைந்த வருமானம் உடையவர்கள். இந்தத் திட்டத்திற்கு 34 கோடி ரூபாய் மூன்று ஆண்டுகளில் செலவிட்டிருப்பதாகச் சொன்னார்கள். இந்தத் தொகை அர்பன் ஹவுசிங்குக்கும் சேர்த்து என்று நான் கருதுகிறேன். (குறுக்கீடு). அப்படியானால் சரி. இப்போது பலர் மனு போட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு காலாகாலத்தில் பணம் கிடைக்கவில்லை. அதற்குக் காரணம் எல்.ஐ.சி., வேறு வங்கிகளிலிருந்து கடன் வாங்கி, கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் உரிய காலத்தில் கொடுக்க முடியவில்லை. இந்தத் திட்டத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து, 1800 கோடிக்குப் போடுகின்ற பட்ஜெட்டில், இந்த கிராமப்புற வீடு கட்டும் திட்டத்திற்காக வருடம் 10 கோடி ரூபாயையாவது ஒதுக்க வேண்டும். அதற்கு இப்போது புதிதாக வந்திருக்கிற அமைச்சர் தீவிரமான முயற்சி எடுத்துக்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பெரியவர் அழகர்சாமி அவர்களின் ஆசை பாராட்டப்படவேண்டிய ஒன்று. கிராமங்களைப் பொறுத்தவரையில் மக்களிடம் வீடு கட்டும் ஆர்வம் இப்போது அதிகமாக இருக்கிறது. ஆனால் அந்த அளவுக்கு பணம் தரும் வாய்ப்பு வசதி இல்லாத காரணத்தினால் அத்தனை பேர்களுக்கும் உடனடியாகக் கொடுக்க முடியவில்லை. 6-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஆண்டுக்கு 40,000 வீடுகள் கட்டிக்கொடுப்பது என்று முடிவு செய்து அதை செயல்படுத்தி வருகிறோம். இன்னும் அதிகமாக கட்டிக் கொடுக்க வேண்டுமென்றால் மாண்புமிகு உறுப்பினரைப் போன்றவர்கள் கொஞ்சம் முயற்சி எடுத்தால் நன்றாக இருக்கும். திரும்பி வரவேண்டிய பணம் சரியாக வரவில்லை; வசூலாகவில்லை; பாக்கி நிறைய இருக்கிறது. வசூல் செய்ய எல்லோரும் கொஞ்சம் ஒத்துழைத்தால் வசூல் செய்ய முயற்சி எடுத்துக்கொள்ளலாம்.